Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6 காசு)

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 } ஈரோடு 8-3-1947 மாசி 24உ { மலர் 22

# கார்ல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு

(1-3-47 குடி அரசின் தொடர்ச்சி)

மார்க்ஸ் ஒரு துறவியல்ல. சுகத்தை வெறுப்பவர் அல்ல. இருக்கும் வசதிகளிலிருந்திருந்தால் நாகரீக வாழ்க்கையை தாராளமாக அனுபவித்திருப்பார். இவருடைய வறுமை தான் இவரைத் தீவிர அரசியல்வாதியாக இருக்கச் செய்தது. அரைப்பசியாயிருந்தபோதிலும் அளவுக்குமீறி வேலை செய்த போதிலும் இவரது சக்தி முழுவதும் புரட்சிகரமான காரியங்களைப்பற்றியதிலேயே செலுத்தப்படலாயிற்று. சில சந்தர்ப்பங்களில் பொறுப்பில்லாமலும் எதைப்பற்றியும் கவலையில்லாமலுமிருந்து வந்திருக்கிறார். சில வேளைகளில் இரவில் டவுன் தெருவிலுள்ள விளக்குகளை உடைத்தெறிந்துவிட்டுப் போலீசாருக்கு 'தடுக்கா' கொடுத்திருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. இச்செய்கை இவ்வளவு பெரிய அறிவாளி செய்யத் துணிந்திருப்பாரா என்பது நம்பத் தகுந்ததாயில்லை. லண்டனில் இவரது வாழ்க்கை துக்ககரமாயில்லை. ஏனெனில் இவரது குழந்தைகளும் மனைவியும் இவரிடத்தில் மிக அன்பாயிருந்தனர். இவரது சித்தாந்தத்தை தொழிலாளர்கள் ஏற்றுக்கொண்டார்கள். இவர்கள் தான் இவருக்கு மனச்சாந்தியை அளித்து வந்தனர். காலஞ் செல்லச்செல்ல இவருடைய புகழ் எங்கும் பரவலாயிற்று. அந்நியநாட்டினர்களில் பலர் இவரைப் பாராட்டலானார்கள்.

### ஆராய்ச்சியும் புத்தகம் வெளியிடுதலும்

ஆரம்பத்தில் லண்டனில் இவருக்கு அதிகச் செல்வாக்கில்லை. 1860ல் ஹெர்வாகட் என்ற புத்தகத்தை அவர் வெளியிட்டார். இது 3வது நெப்போலியனை ஆதரித்த ஒரு புரட்சிக்காரனைத் தாக்கி— அனாவசியமாகத் தாக்கி வலிய சண்டைக்குப் போன புத்தகம். அமெரிக்காவில் வெளிவந்து கொண்டிருந்த நியூயார்க் டிரிபியூன் என்ற பத்திரிகைக்கு அவர் எழுதிவந்த கடிதங்கள் சாதாரண கட்டுரைகள் என்று கருதப்படவில்லை. 3வது நெப்போலியனைப்பற்றி இவர் எழுதிய கட்டுரை லூயி போனபார்ட் 18வது புருமேர் என்ற பெயரால் பிரசுரிக்கப்பட்டது. இதை ஒரு பத்திரிகை என்று சொல்லுவதைவிட சரித்திரத்திற்குச் சமானமானதாகவே சொல்லலாம். இவர் எழுதிய புத்தகங்களும் கட்டுரைகளும் அநேகமாக அப்பொழுது நடந்த அரசியல்கிளர்ச்சிகளைப் பற்றியே எழுதப்பட்டவைகள். அன்று அவருக்கு முக்கியமான சம்பவங்களாகத் தென்பட்டவைகள் இன்று நமக்கு மிக அற்பமாய்த் தோன்றலாம். ரஷ்யாவில் ஜாரின் அக்ரமத்தை எதிர்த்துப் போராடிவந்த டேவிட் ஊர்குவார்ட் என்பவரை ஆதரித்த நோக்கத்தோடு இவர் எழுதிவரலானார்.

1859ல் இவரது போக்கு புரட்சி இயக்கத்தில் வேகமாகச் செல்லலாயிற்று. உலகிலே காணப்படும் பொருளாதார நெருக்கடி முதலாளித் தத்துவத்தால்தான் உண்டாகிறது என முடிவு செய்துகொண்டு முதலாளித்தத்துவம் எப்படி உண்டாயிற்று என்றும் அதன் வளர்ச்சியைப்பற்றியும் ஆராயமுற்பட்டார். இந்த ஆராய்ச்சியின் விளைவாக இவர் முதன் முதலாக அரசியல் ஒழுங்கின் ஆராய்ச்சி என்ற பெயரால் ஓர் விமர்சனம் போன்ற புத்தகத்தை வெளியிட்டார். இதைக் கண்டு யாவரும் இவரைப் பாராட்டினார்களென்றாலும் இப்புத்தகம் அதிகதூரம் பரவவில்லை. அந்த வருஷத்தில் உயிர்களின் தோற்றமென்பதை டார்வின் எழுதிவெளியிட்டார். 8 வருடங்களுக்குப் பின்னால் தான இவர் இரண்டாவதாக முதலாளித்துவத்தைப்பற்றி ஆராய்

ச்சி மூலமாக ஒரு புத்தகத்தை வெளியிட்டார்; இப்புத்தகம் முற்றிலும் ஒரு புதிய முறையிலே புதிய கருத்துக்களைக் கொண்டதாய் வெளியிடப்பட்டிருந்தது. இதுதான் 'கேபிடல்' என்ற பெயருடன் கூடிய புத்தகத்தின் முதற்பாகம்.

இக்காலங்களில் அவர்களிருவரும் பழைய பொருளாதார நூல்களை ஆராய்ச்சி செய்வதிலும், அக்காலத்தில் நடைமுறையில் பொருளாதாரம் இருந்துவரும் நிலைமையை அறிவதிலுமே தங்கள் முழு கவனத்தையும் செலுத்திவந்தார்கள். எஞ்சல்ஸ் லோகாயுதமான கோட்பாடுகளிலே கவனத்தை அதிகமாகச் செலுத்திவந்தார். இவ்விருவர்களுடைய முயற்சிகளில் மார்க்சின் முயற்சி அனுபவசாத்தியமானது; முக்கியமானது. எஞ்சல்சினது அநுபவசாத்தியமற்றது; யூகிக்கக்கூடியது. அவ்விருவர்களுடைய பிரயாசையும் ஒன்றுக்கொன்று முரணானதல்ல. இவ்வளவு சிறப்பு வாய்ந்த மூளை பலம் படைத்தவர்கள் பொருளாதாரத்தை மட்டிலும் விசாரணை செய்தார்களே யொழிய சரித்திரக் கோட்பாடுகளையும், வகுப்புப் போரின் கோட்பாட்டையும் விசாரணைசெய்து விளக்கிக் காட்டவில்லை.

1859 முதல் 1867வது வருடங்களுக்கு இடையேயுள்ள காலந்தான் மார்க்ஸ் சமாதானமாக வாழ்ந்தகாலம். 1855ல்தான் தனது புதல்வன் எடகாரை இழந்தார். அதன்பின் அவருக்குப் புத்திரசோகம் ஏற்பட்டதேயில்லை. அவர் ஏழையாயிருந்தபோதிலும் அவர் துர்ப்பாக்கியசாலியல்லர். அவர் அரைப்பட்டினியாயிருக்கவில்லை. அவரது நண்பர் எஞ்சல்சின் உதவி தவறாமல் கிடைத்துவந்தது. ஒரே ஒரு சமயத்தில்தான் இந்த உதவி தடைப்பட்டது அதாவது 1863ல் எஞ்சல்சின் மனைவி மேரி பர்ன்ஸ் காலமானார். எஞ்சல்ஸ் தனது காதலியிடம் அதிக நேசம் வைத்திருந்தார். காதலி யிறந்த துக்கச்செய்தியை மிக்க வேதனையோடு தனது நண்பர் மார்க்சுக்கு எழுதினார் மார்க்ஸ் அதற்குப் பதில் எழுதுகையில் ஆறுதலான வார்த்தைகள் ஒன்றும் எழுதாமல் தனது வறுமைப் புராணத்தைப் பாடிவிட்டார். இதைப் பார்த்ததும் எஞ்சல்ஸ் கோபமடைந்து உதவியை நிறுத்திவிட்டார் மார்க்ஸ் தனது வறுமையை நினைத்து நினைத்து நொந்துகொண்டு உருக்கமாகத் தனது நண்பரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். அதோடு பழய சம்பவம் மறைந்தது. அடுத்தாண்டு எஞ்சல்ஸ் தனது காதலியின் சகோதரியை மணந்துகொண்டார். சந்தோஷமாக சகல போகபோக்கியத்தோடு 14 வருடம் கழித்தார்

ஏதோ ஒருவாறு அவரது கஷ்டங்கள் தீர்ந்தாலும் ஆபத்துகள் ஒழியவில்லை. 8வருடம் அவர் வறுமையில் வாடிய வாட்டம் அவரது உடலைப் பாழ்படுத்திவிட்டது. ஒரு பொழுதும் செம்மைப்படுவதாகத் தோன்றவில்லை. 1859ல் மார்க்ஸ் 41வயதுடையவராயிருந்தாலும் உடல் மிகப் பாதிக்கப்பட்டிருந்தது. ஆகாரக் குறைவாயிருந்தபோதும் அதிக வேலை செய்த காலையிலும் அதிகமாகப் புகைபிடித்து வந்தார். இதனால் அவரது ஹிருதயம் சிறிது பாதிக்கப்பட்டிருந்ததோடு அவரது ஜீரணக் கருவிகள் அதிகமாகச் சேதமடைந்திருந்தன. புகையிலையில் உள்ள நிக்கோடைன் என்ற விஷத்தால் அவரது உடலில் அவரது குடல்கள் சரியாக இயங்கவில்லை. எப்பொழுதும் அஜீரணத்தால் துன்புற்ற வண்ணமாயிருந்தார். ஆனால் புகை பிடிப்பதைமட்டும் விடவேயில்லை. வறுமையின் காரணமாக மலிவான புகையிலையால் செய்யப்பட்ட சிகரெட்டுகளை வாங்கி உபயோகித்து வந்தார்.

1857ல்தான் இவர் நோயால் மிக வருந்தினார். அது முதல் நோய் அவரது உடலைவிட்டு அகலவேயில்லை.

அவர் எழுதிய 'காபிடல்' என்ற புத்தகத்தின் முதற்பாகம் 1867ல் வெளிவந்தது. இந்தப் புத்தகத்திலுள்ள விஷயத்தைப்பற்றி பின்னால் விவரிக்கப்படும். ஆனால் இந்த புத்தகத்தை எழுத அவர் மேற்கொண்ட கஷ்டங்களும் பொறுமையுமே பின்னால் அவரது புகழுக்குக் காரணமாயிருந்தன.

இந்தப் புத்தகத்தை வெளியிட்டபிறகு அதிகமான நடவடிக்கைகளில் கலந்துகொள்ளவில்லையாயினும் அவரது புகழ் சர்வதேசமும் பரவலாயிற்று. அவர் பாரிசில் கூட்டிய முதல்

(தொடர்ச்சி 8-பக்கம்)


பூந்தோட்டம்

3-ம் மலரில்

பெரியார்
மாஜி மந்திரி S. முத்தையா B A B L
சொக்கப்பா M. A. L. T.
நெடுஞ்செழியன் M. A.
பாலகிருஷ்ணன் B. A. L. T.
மு கருணாநிதி
கருணானந்தம்
குலோத்துங்கன்
விசாலாட்சி M B B S
ஆகியோரின் கட்டுரைகளுடனும்

சர் செல்வம் அவர்களின் முகப்போடு
15-3-47ல் வெளிவரும்.

பூந்தோட்டம், சேலம்

# மிரட்டுதல் திட்டம்

(சித்திரபுத்திரன்)

விவசாயிகளை மிரட்ட விவசாய வரி,

ஜமீன்தார்களை மிரட்ட ஜமீன் ஒழிப்பு,

வியாபாரிகளை மிரட்ட தரகர் ஒழிப்பு,

மில் முதலாளிகளை மிரட்ட மில் ஒழிப்பு,

மோட்டார் போக்குவரத்துச் சொந்தக்காரர்களை மிரட்ட போக்குவரத்துகளைச் சர்க்கார் நடத்துவது.

என்பவை போன்ற பல திட்டங்களை வாயில் சொல்லிக் கொண்டு, திட்டங்களில் போட்டுக்கொண்டு மக்களை அடக்கி ஆளவும், சம்பந்தப்பட்டவர்களிடம் ஏராளமான பணம் பறிக்கவும் தந்திரம் செய்வதல்லாமல் கடைசியாக காங்கரசார் (பார்ப்பனர்கள்) செய்யப்போகும் காரியம் பெரிய பித்தலாட்டம் தான் என்பதில் யாரும் சந்தேகமோ பயமோ படவேண்டியதில்லை எனலாம்.

ஆனால்,

வக்கீல்களை ஒழிக்கவோ,

உத்தியோகத்தின் பேரால் அடிக்கும் கொள்ளையை ஒழிக்கவோ,

உத்தியோக எண்ணிக்கையைக் குறைக்கவோ, பேசவோ, கனவிலும் யாராவது கருதவோ சிறிதுகூட பார்ப்பனர்கள் (காங்கரசார்) இடம் கொடுக்க மாட்டார்கள். இராஜா இல்லாத நம்ம மந்திரிகளும் சிறிதுகூட சிந்திக்கமாட்டார்கள். ஏனென்றால் பித்தலாட்டத்தில் ஏற்படும் லாபத்தில் அவர்களுக்கும் ஒரு பங்கு வருகிறதல்லவா?

## கோவை மாவட்ட திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக்கூட்டம்

16-3-47 தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு பழயகோட்டையில் ஷை நிர்வாகக் கமிட்டிக்கூட்டம் நடைபெறும்.

நிதி டிக்கட் பெற்றிருப்பவர்கள் தயவுசெய்து இதுவரை விற்கப்பட்ட டிக்கட்டுகளின் தொகையையும், மீதி டிக்கட்டுகளையும் கண்டிப்பாய்க் கொண்டுவந்து சேர்க்கவேண்டுகிறோம்.

கமிட்டி அங்கத்தினர்களும், நிதி டிக்கட் பெற்றுள்ளவர்களும் தவறாமல் ஷை கமிட்டிக்கூட்டத்திற்கு வந்துசேரக் கோருகிறோம்.

பெத்தாம்பாளையம்,
P. பழனிச்சாமி,
தலைவர்.
S. R. சந்தானம்,
பொதுக்காரியதரிசி.

## தாழ்த்தப்பட்டோர் விடுதலை நிவாரண நிதி

23 2-47ல் திண்டுக்கல் கானவாய்த் தெருவில் திண்டுக்கல் தாழ்த்தப்பட்டோர் சம்மேளன தலைவர் தோழர் ம. தனுஷ்கோடி அவர்கள் தலைமையில் மதுரை மாவட்ட தாழ்த்தப்பட்டோர் விடுதலை நிவாரண நிதிக்கமிட்டித் தொடக்கக் கூட்டம் நடைபெற்றது. நிதியின் அவசியம் பற்றி டி. இராஜ், பி. சமதர்மன் ஆகிய தோழர்கள் பேசினார்கள்.

நிதி திரட்டல், அதற்கான செய்தல், நிதியின் அவசியம் முதலியவை குறித்துப் பல தீர்மானங்களும், குறிஞ்சிப்பாடி, அரங்கமங்கலம், ராசகுப்பம், முதலிய ஊர்களில் மைனர்களிடம் போராடி அவ்வூர் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் குடிதண்ணீர் வசதி செய்துகொடுத்த திராவிடர் கழகத் தோழர் கு. த. பொ. பழனியப்பன் அவர்களைப் பாராட்டி ஓர் தீர்மானமும், நிறைவேற்றப்பட்டன.

ஷை சங்கத்திற்குப் பொருளுதவி செய்பவர்கள் கீழ்க்காணும் முகவரிக்குப் பொருள் அனுப்பும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பி. சமதர்மன்,
கானவாய்த்தெரு, பேகம்பூர்,
திண்டுக்கல்.


எங்கள் முதல் வெளியீடு! விற்பனைக்குத் தயார்!!

# தத்துவ விளக்கம்

சேலம் கல்லூரியில் பெரியார் சொற்பொழிவு.

விலை அணா 12.

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு.

அடுத்த வெளியீடுகள்! எதிர்பாருங்கள்!!

தளபதி அண்ணாதுரை சொற்பொழிவுகள்.

அழகிய முறையில் கார்டு, கவர், லெட்டர்பேப்பர் தயாராகின்றன.

நாதன் & கோ, கச்சேரி வீதி, ஈரோடு.



# மாலை

(மாதப்புத்தகம்)

பெரியாரின் பொன்னுரைகள்,
அறிஞர்களின் ஆய்வுரைகள்
கவிஞர்களின் கருத்துரைகள்
சிறு கதை, தொடர் கதை
மற்றும்
பல விசேடச்செய்திகள் தாங்கி
அதிவிரைவில் வெளிவரும்.
பதிப்பாசிரியர்: குகன்
தனிப்பிரதி 2 அணா

எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை. ஏஜண்டுகள் பிரதி ஒன்றுக்கு 4 அணாவீதம் டிபாசிட் கட்ட வேண்டும்.

விவரங்களுக்கு:-

நிர்வாகி "மாலை"
அரிசிப்பாளையம், சேலம்.

குடி அரசு

1947 ௵ மார்ச் ௴ 8உ

# திராவிடமே! தமிழ்நாடே!

திராவிடமே! தமிழ்நாடே! நீ எந்தப்பெயரையோ வைத்துத் தொலைத்துக்கொள். இன்று நீ அனாதியாய், அழுவாரற்ற பிணமாய் இருக்கின்றாய் உன்னை ஏன் என்று கேட்க ஆளில்லை இந்தத் திராவிட நாட்டில் 10ல் ஒரு பங்குகூட இல்லாத முஸ்லிம்களின் நிலை எவ்வளவு உயர்ந்துவிட்டது? அவர்கள் எவருடைய தயவும் வேண்டாத உயர்நிலை அடைந்துவிட்டார்கள். அதுபோலவே திராவிடநாட்டில் 6ல் ஒரு பங்கு கொண்ட தீண்டப்படாத மக்களாயிருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் நிலை திடீரென்று எவ்வளவு உயர்ந்துவிட்டது தெரியுமா? இந்தியாவைவிட்டு பிரிட்டிஷார் விலகிக்கொள்ளும் ஒப்பந்தத்தில் இந்தத் தீண்டப்படாத மக்கள் என்பவர்களின் விஷயம் ஒரு நிபந்தனை ஆக்கப்பட்டு அதற்கேற்றாற்போல் வேலையும் நடந்து வருகிறது. அவர்கள் இனிமேல் தீண்டப்படாத மக்களும் அல்ல, தாழ்த்தப்பட்ட மக்களும் அல்ல என்கின்ற நிலைமையை அடைந்துவிட்டார்கள். அவர்களுக்கு இனி உத்தியோகங்கள் ஓடி ஓடி வரும்; பதவிகள் தேடித்தேடி வந்து கட்டி அணையும்.

இத்திராவிடநாட்டில் 30க் ஒருபங்கு விதம் எண்ணிக்கைக் கொண்ட பார்ப்பனர்கள் நிலையை நீயே பார். அவர்கள் இல்லாத இடம் எது? இந்திய ராஷ்டிரபதி, இந்திய முதல் மந்திரி, திராவிட முதல்மந்திரி மற்றும் என்ன என்ன எல்லாவற்றிலும் பார்ப்பனர்கள், சர்வம் பார்ப்பன மயம். இவர்கள் தவிர கிரிஸ்தவர்களைப் பார்! அவர்கள் திராவிடத்தில் 40ல் ஒரு பங்கு (இருக்கலாம்) உள்ளவர்கள் அவர்களுக்கு என்ன குறை என்று யாராவது சொல்ல முடியுமா? பார்ப்பனர்களுக்கு அடுத்தபடியில் நல்ல செல்வாக்குடனும் உயர்தர வாழ்க்கையோடும் இருக்கிறார்கள். மற்றும் இந்தத்திராவிடநாட்டுக்குப் பிழைக்கவந்த "யாதும் ஊரே" என்கின்ற வடநாட்டு மக்கள் கூட்டத்தின் தன்மையைப் பார். அவன் உண்டு கழித்தது (மீதி)தான் உனக்கு மிச்சம் என்கின்ற தன்மையில் இருக்கிறது.

இந்த நிலையில் நீ, தமிழனா? தெலுங்கனா? கன்னடியனா? மலையாளியா? யார்? யாராய் இருந்தாலும் சரி. சென்னை மாகாணத்தவனான திராவிடனான அல்லது தமிழனே ஆன நீ என்ன நிலையில் இருக்கிறாய்? தமிழ் இலக்கண இலக்கியத்தைக் கரைகண்டாய், தமிழின் மூலத்தையும் தொன்மை நிலையையும் தோண்டி எடுத்தாய்; 'தமிழ்த் தெய்வமாகிய முருகனாகவே" ஆகித் தமிழ்க் இணையற்ற வல்லவனாகி ஆராய்ச்சிகள் செய்து தமிழனின் உயர்தன்மையைக்கண்டு பிடித்தாய்; இயற்கையோடு இணைந்தாய்; எண்ணில்லாத புத்தகம் பதிப்பித்தாய்; எங்கும் தமிழ்மயம், எங்கும் தமிழ் முழக்கம் என்கிறாய். ஆனால் இந்த(உன்)நாட்டில் உன் நிலை என்ன? உன் பங்கு என்ன? உன் உரிமை என்ன? என்பதைச் சிந்தித்துப்பார்.

சாயத்தில், சமுதாயத்தில் அரசியலில், வாழ்வில், சட்டத்தில், சாஸ்திரத்தில், கடவுள் சன்னிதானத்தில், உன் நிலை என்ன என்பதை யோசித்துப் பார். இவற்றில் நீ மற்றவரினும் தாழ் நிலையில் இருப்பதற்குக் காரணம் என்ன?

நீ யார் என்பது உனக்குத் தெரியாது. யார் என்றோ நினைத்துக்கொண்டு விலகித் தனியனாய் நிற்கிறாய். "ஒற்றுமை, கூட்டு லட்சியம், பொதுநலம் ஆகியவற்றுடன் தமிழன் (திராவிடன்) எவன் வாழ்ந்தாலும் அவ்வாழ்வு நான் வாழ்கின்றமாதிரிதான்; தமிழனுக்காக தமிழன் வாழ்கின்றானே ஒழிய, வாழவேண்டுமே ஒழிய தனித்தனி தமிழனின் சுயநல வாழ்வுக்காக அல்ல" என்பதாக எதாவது ஒரு தமிழன் (திராவிடன்) வாழ்கின்றானா? எண்ணுகின்றானா? திராவிடத்தில் உள்ள ஒவ்வொரு தமிழ்மகனே! நீயே எண்ணிப் பார்.

இப்போது தெரிகிறதா, திராவிடன் ஏன் கீழ் நிலையில் இருக்கிறான் என்பதற்கு உள்ள காரணம்?

வெள்ளையன் ஆதிக்கம் பொழுது சாய்ந்துவிட்டது. ஆரியன் ஆதிக்கம் பொழுது புலர்ந்துவிட்டது. ஏற்கனவே ஆரியன் ஆதிக்கமே பல்லாற்றானும் இருந்துவந்தது என்றாலும் அது வெள்ளையன் முத்திரையின் கீழ் நடந்துவந்ததாகும். இனி ஆரியன் ஆதிக்கம் வெளிப்படையாகவே ஆரியன் முத்திரையின் கீழ் நடந்து வரப்போகிறது. இன்று ஆரியர்களது ஏகபோக ஆட்சிக்கு உள்ள ஒரு சிறு தடையெல்லாம் முஸ்லிம்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகிய இருவர்களிடமும் ஒரு ஒப்பந்தம் (ஒற்றுமை) ஏற்பட வேண்டும் என்கின்ற ஒரு சாக்குதானே தவிர திராவிடன் (தமிழன்) நிலையைத் தன்மையைப் பற்றிய சங்கதி ஒன்றுமே இல்லாமல் போய்விட்டது.

அரசியல் நிர்ணயசபை என்பது பயனற்ற, பித்தலாட்ட, ஒரு கூட்டத்தாரின் நலனுக்கு மாத்திரம் ஏற்பட்ட ஒரு மாயா ஜால மந்திரசபை என்றாலும் அந்தப்படிச் சொல்ல முஸ்லிம்கள் தான் உரிமையுள்ளவர்களாய் இருக்கிறார்களே தவிர திராவிடர்கள் அதைப்பற்றி நினைக்கவும் அருகதை அற்றவர்களாக ஆகிக்கொண்டார்கள். ஏன் என்றால் திராவிடர்கள் சிலர் அரசியல் நிர்ணயசபையில் இருக்கிறார்கள், அவர்கள் திராவிட சமுதாய பிரதிநிதிகள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அவர்கள் சொல்லாவிட்டாலும் ஆரியர்கள் அவர்களைத் திராவிடர்களின் பிரதிநிதிகள் என்றே பிரிட்டிஷாரிடம் கணக்குக் (லிஸ்ட்டு) கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் இந்தத் திராவிடர்கள் அரசியல் நிர்ணய சபையில் ஆரியர்—திராவிடர் என்கின்ற பேச்சே பேசக் கூடாது என்கின்ற ஒப்பந்தத்தின் மீது ஆரியர்களால் மங்களாசாசனம் செய்யப்பட்டவர்களாவார்கள்.

எனவே இப்போதைய அரசியல் மாறுதலில் திராவிடர்கள் அல்லது தமிழர்கள் திராவிடநாடு அல்லது தமிழ்நாடு என்பதைப் பெறுவதற்கு அல்லது அடைவதற்கு என்ன செய்ய வேண்டும்? அரசியல் நிர்ணய சபையில் இல்லாவிட்டாலும் ஒரு தனி சபையாகத் திராவிடர் அல்லது தமிழர்கூடி ஒரு முகப்பட்ட அபிப்பிராயத்தை—கருத்தை—தேவையை வலியுறுத்தி அதை வைத்து ஒரு பொதுக் கிளர்ச்சி அல்லது சிலர் லண்டன் சென்று வலியுறுத்திவிட்டு வந்து கிளர்ச்சிசெய்வது என்கின்றதான ஒரு தீவிரப்பணியில் அவசரமாய் ஈடுபடவேண்டியது இன்று மிகமிக அவசியமான காரியம் என்று கருதுகிறோம்.

திராவிடமே! தமிழ்நாடே! என்ன சொல்லுகிறாய்? திராவிடத்தின் வரலாற்றுச் சுவடியையும், புதைபொருளையும் பற்றிப் பிரசங்கமாரிப் பொழிவதும், கம்யூனிசம், சோஷலிசம், தேசியம் என்று மக்களைத் தொல்லைப்படுத்தி நாசவேலை செய்வதும் முதலிய பணியோடு உன் வாழ்வு, தொண்டு, கடமை முடிந்ததா?

மற்ற சமுதாயத்தைப் பார்! பார்! பார்!

## பெரியார் ஈ.வெ.ரா

பெரியாரவர்கள் 5-3-47ந் தேதி ராயபுரம் ஆஸ்பத்திரியில் இருந்து டிஸ்சார்ஜ் ஆனார். 7ந் தேதி சென்னையைவிட்டுப் புறப்பட்டு, 8ந்தேதி சிதம்பரம் போவார், 9ந்தேதி காலை ஆர்க்காடு, 10ந்தேதி ஆரணி, 12ந் தேதி ஈரோடு, 16ந்தேதி கடலூர், 17ந் தேதி திருச்சி.

## இன்றைய அரசியல் திட்டம்

இந்தியாவின் இன்றைய அரசியல் திட்டம் அராஜகம், இந்து முஸ்லிம் கலவரமாக இருந்து வருகிறது. வங்காளத்தில் நடந்ததென்ன? பீகாரில் நடந்ததென்ன? பம்பாயில் நடந்ததென்ன? இன்று பாஞ்சாபில் நடப்பது என்ன? நாளை எல்லைப்புரத்திலும், அடுத்த நாள் அஸ்ஸாமிலும் நடக்கப் போவது என்ன? அடுத்தமாதங்களில் இந்தியாவின் தென் கோடியிலும் துவங்கப்போவது என்ன? இவைதானே இன்று அரசியல் திட்டமாக—கிளர்ச்சியாக இருந்துவருகிறது?

நமது நிலை இன்று "உடும்பு வேண்டாம், கைமிஞ்சினால் போதும்" என்று பொந்தில் கைவிட்ட உடும்பு வேட்டைக்காரன் சொன்னதுபோல் சுதந்திரம் இல்லாவிட்டாலும் அடிதடி, கொள்ளை, கொலை, கொளுத்துதல், நாசவேலை இல்லாமலிருந்தால் போதும் என்று கருதக்கூடிய அளவு பயமும் கவலையுமாய் இருக்கிறது.

இப்படிப்பட்ட கலவரம், நாசவேலைபற்றிக் கவலைப்பட இந்த நாட்டு மக்களில் பொறுப்புள்ள மக்கள் யாருமே இல்லாமல் போய்விட்டது மிகவும் பரிதாபகரமான காரியமாகும். இந்தநாடு முழுவதும் ஒரு கிருஸ்தவ நாடாகவோ அல்லது இஸ்லாம் நாடாகவோ அல்லது இந்துக்கள் அல்லாதவர்கள் நாடாகவோ இருந்திருக்குமானால் இந்த நிலைமை சிறிதுகூட ஏற்பட இடமே இருந்திருக்காது. பாழும் இந்துமதமும் அதிலும் பொறுப்பற்ற, வன்னெஞ்ச பார்ப்பனீயமும் இருந்து கொண்டு ஒரு மாபெரும் சமுதாயத்தை அதுவும் 100க்கு 87 பேர்கொண்ட முஸ்லிம் அல்லாத-பார்ப்பனரல்லாத சமுதாயத்தைச் சித்திரவதைக்குள்ளாக்கி வருகிறது. மதபோதை, மதக்கிருக்கு அல்லாமல் இன்றைய அட்டூழியங்களுக்கு வேறுகாரணம் என்ன சொல்ல முடியும்? இந்த மத போதைப் பார்ப்பனீயத்தால் ஊட்டப்படுவதல்லாமல் வேறு காரியகாரணம் ஏதாவது சொல்லமுடியுமா என்று யோசிக்கவேண்டுகிறோம்.

இன்றைய நிலையில் நம் நாடு ஒரு பாதுகாப்பு நாடாக ஆக்கப்படவேண்டுமானால் இந்துமதம் அல்லது பார்ப்பனீயம் அடியோடு ஒழிந்த திராவிட நாடாகஆகவேண்டும்; அல்லது இஸ்லாமிய மக்களே கொண்ட நாடாக ஆகவேண்டும். அப்படிக்கில்லாமல் தேசியப் பெயரையும், மதப் பெயரையும் கொண்டு ஒரு சிறு சோம்பேறி வஞ்சகக் கூட்டம் வாழ நாம்

பலி ஜீவன்களாக வளர்க்கப்படுவது திராவிட மக்களுக்கு மாபெரும் தொல்லையும் இழிவுமான காரியமாகும். வடநாட்டில் வடகோடியில் காந்தியத்தால் காங்கிரசால் வைக்கப்பட்ட இந்துமுஸ்லிம் கலகத்தீயானது தென்னாட்டைத் தாவ இன்னும் ஒரு மாதகாலம் கூட தேவை இருக்காது என்றே இன்றைய நிலையில் கூறுவோம். என்னென்றால் இன்று தேசபக்தர்களுக்கு; தேசிய வீரர்களுக்கு இதைத்தவிர வேறு வேலை கொடுக்க காந்தியாரிடமும் காங்கரசிடமும் வகைஇல்லாமல் போய்விட்டது.

கோவில் பிரவேச உரிமை கொடுப்பதன் மூலம் இந்து முஸ்லிம் கலவரத்துக்குக் காங்கரஸ் ஷெடியூல் வகுப்பாரைப் படை சேர்க்கிற வேலையில் தீவிரமாக இறங்கி இருக்கிறது. இது மேலிடத்தில் இருந்துவந்த உத்திரவேயாகும். மற்றப்படி கைராட்டினம், கைக்குத்தல் அரிசி, கிராமச் சீரமைப்பு முதலிய காரியங்களுக்கு, அதற்காக ஒதுக்கி வைக்கப்பட்ட பல கோடி ரூபாய்களும், மற்றொரு வகையில் படைசேர்க்க, கூலிப் பட்டாளம் சேர்க்கச் செய்யப்படும் சூழ்ச்சித் தந்திரவேலைகளேயாகும். இதை இல்லையென்று யாராவது சொல்ல முடியுமானால் அவர்களை ஒன்று கேட்கிறோம். நெல் மிஷின்கள் ஒழிக்கப்பட்டு யாவரும் கையால் நெல்குத்தி அரிசியாக்கப்பட வேண்டுமென்பதும், நூல்மில், மில் நெசவு ஒழிக்கப்பட்டு யாவரும் கையால் நூற்று, கையால் நெய்தே துணி உண்டாக்கப்பட வேண்டுமென்பதும் இன்று என்றைக்காவது ஆகக்கூடிய காரியம் என்று சொல்லமுடியுமா? என்று கேட்கிறோம். இந்த வேலைகளின் மூலம் பதினாயிரக்கணக்கான வாலிபர்களுக்கு வேலைகொடுத்துத் தங்கள் இனத்தார்மீது ஏவிவிடலாம் என்பதைத்தவிர வேறு காரியம் ஒன்றும் கருத்தாய்க் கொண்டதல்ல என்பதை மறுபடியும் உறுதி கூறுவோம்.

## திராவிடர் கழக நிதி அளிப்பு

கடலூர் மஞ்சக்குப்பம் மைதானத்தில் 16-3-47ந் தேதி ஞாயிறன்று தோழர் மா. பீட்டர் பி. ஏ., அவர்கள் தலைமையில் திராவிடர் கழகச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அவ்வமயம் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களிடம் திராவிட கழக நிதி அளிக்கப்படும். பெரியார் அவர்களும் தோழர் நெடுஞ்செழியன் அவர்களும் சொற்பொழிவாற்றுவர். திராவிடத்தோழர்கள் திரளாக வரவேண்டுகிறேன்.

வி. கே. எஸ். சண்முகசுந்தரம்,
தலைவர், திராவிடர் கழகம்,
கூடலூர் போஸ்டு

## தபால்-தந்தி இலாகாவில் வகுப்புவாரிப் பிரதிநிதித்தும்

### பரிசீலனை விசேஷ அதிகாரி நியமனம்

தபால் தந்தி இலாகாவின் ஊழியர்களில் பல்வேறு சிறுபான்மை வகுப்பினருக்கும் சரியான பிரதிநிதித்துவம் இருக்குமாறு செய்யும் விஷயத்தைப் பரிசிலனை செய்து சிபார்சு செய்வதற்காக, தபால் தந்தி இலாகாவின் மாஜி அதிகாரியான கான்பகதூர் எம். என். கான், ஓ. பி. ஈ., விசேஷ அலுவல் அதிகாரியாக இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் சமீபத்தில் சுற்றுப்பிரயாணம் செய்யத் தொடங்கி, தமது அறிக்கையைத் தயாரிப்பதற்கு வேண்டிய தகவல்களைச் சேகரிக்கும் பொருட்டுப் பற்பல தபால் வட்டாரங்களிலும் உள்ள தபால் காரியாலயங்களுக்கு விஜயம் செய்வார்.

## பொதுக்கூட்டம்

9-3-47ல் திருப்பூரில் திராவிடர் கழகப் பொதுக்கூட்டம் நடைபெறுமென்றும், உள்ளூர் வெளியூர் தோழர்கள் கருஞ்சட்டையுடன் வரவேண்டுமென்றும், அன்று மாலையிலேயே நிகழும் ஆண்டிற்கு நிர்வாகக்குழுத் தேர்தல் கழகக்கட்டிடத்தில் நடைபெறுமென்றும் தோழர் வ. ராசன் அறிவிக்கிறார்.

## நிறைவு விழா

16-2-47 மாலை 4மணிக்கு, 38 சேம்பல் ரோடு, கோலாலம்பூரில், கல்லக்குடி தோழர்கள் க. ம. துரைசாமி—காமாட்சி அவர்களின் செல்வி மணிமேகலையின் ஆறாம் ஆண்டு நிறைவு விழா, மலாயா மருத்துவர் மத்திய சங்கத் தலைவர் தோழர் கு அ அப்பாசாமி அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தோழர்கள் வ. கலியாணசுந்தரம், பெ ரெங்கசாமி, கரு. வெள்ளைத்துரை ஆகியோர், பிறந்தநாள் விழாவின் சிறப்பையும், முக்கியத்தையும் பற்றித் தெளிவுறப் பேசினர்.

செல்வியின் எதிர்கால வாழ்க்கைக்கும் கல்வி கற்பதற்கும் உறுதுணையாக அதன் பெயரால் ஆண்டுதோறும் வெள்ளி பத்துச் சேர்க்கப்படுமென பெற்றோர் தெரிவித்ததுடன், மகவுக்கு ஏழாம் ஆண்டின் நினைவாக எழுபது வெள்ளியும் வழங்கினர். தோழர் க. ம. துரைசாமி அவர்களால் நன்றிகூறக் கூட்டம் முடிவுற்றது. வை. கணேசன்.

(பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் பெண்கள் முன்னேற்றம் அடைவதற்குச் செய்யவேண்டுவனவற்றுள், பெண்ணின் பெற்றோர்கள் பெண்களின் பிற்கால வாழ்க்கைக்கென பொருள் சேமித்து வைக்கவேண்டியதின் அவசியத்தையே தலைசிறந்ததாக கூறிவந்துள்ளார். பெரியார் கூற்றுக்கேற்ப தோழர் க. ம. துரைசாமியும் அவரின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் காமாட்சியம்மையாரும் தங்கள் பெண் குழந்தையின் பிற்கால வாழ்க்கைக்குப் பொருள் சேர்த்து வைக்கச் செய்துள்ள முடிவு பெரிதும் பாராட்டிற்குரியது. இதைக் கண்ணுறும் எல்லா தோழர்களும் இவர்களைப் பின்பற்றுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். ஆ-ர்)

## மறைவு

கீழ்ஈரால் வட்டாரத்தை திராவிடர் கழகக் கோட்டையாக்கியவரும், இயக்கத்தால் பல தொல்லைகள் அனுபவித்தும் இயக்கத்தைவிட்டு மாறாமல் கடைசிவரை பணியாற்றியவரும், நெல்லை மாவட்ட சுய மாநாட்டை இரண்டுதடவை தமது ஊரில் நடத்தித் தந்தவருமான கீழ்ஈரால் வேல் வெள்ளைச்சாமி 3-3-47ல் இயற்கையெய்தினார். இவருக்கு நீண்ட நாட்களாகவே வியாதி இருந்தது. தமது மரணத்திற்கு முன்புவரையிலும் பெரியார் அவர்களைப் பார்த்துவிட்டே இறக்கவேண்டுமென்று கருதிக்கொண்டிருந்தார். இதற்காகவே நெல்லைமாவட்ட சுற்றுப்பிரயாணத்தில் பெரியார் அவர்கள் இவரது ஊருக்கும் வரச் சம்மதம் அளித்திருந்தார்கள். 144 தடையுத்திரவு காரணமாக இந்தச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இறக்கும்பொழுதுகூட இந்த ஏக்கம் குடிகொண்டிருந்ததை காண்பதற்கு மிகவும் பரிதாபகரமாகவும், கண்ணீர்விடும் செய்தியாகவுமிருந்தது. தமது மனைவியையும் தமது 5 பெண் குழந்தைகளையும் விட்டுப் பிரிந்தார். இவர் மரணம் நெல்லைமாவட்டத்திற்குப் பெருநஷ்டமாகும்.

o o

27-2-47 இரவு கொரடாசசல் திராவிடர் கழகத் தலைவரும், சீர்திருத்த நோக்கங்கொண்ட தோழருமான தோழர் குஞ்சிதபாதம் அவர்கள் இயற்கையெய்தினார். இவரின் மறைவு கொரடாசசல் திராவிடர் கழகத்தாருக்குப் பெரிய இழப்பு என்று சொல்லலாம்.

o o

28-2-47ல் கோவை திராவிடர் மாணவர்க் கழகச் செயலாளர் தோழர் தண்டபாணி அவர்கள் இயற்கையெய்தினார். சுமார் இரண்டு வாரமாக நோய்வாய்ப்பட்டு இயற்கையெய்திய தோழர் தண்டபாணியின் மறைவு கோவை திராவிடர் கழக மாணவர்களுக்கு ஒரு பெரிய இழப்பு என்று கூறலாம். தோழர் தண்டபாணி பல எதிர்ப்புக்கிடையே இயக்க வேலையைச் செவ்வனே செய்து வந்தவர். அண்மையில் கோவை மாவட்ட திராவிட மாணவர் மாநாடு தோழர் தண்டபாணியின் பெரும் முயற்சியால்தான் கோவையில் நடைபெற்றது.

o o

மேற்குறிப்பிட்டுள்ள மூன்று தோழர்களின் மரணம் திராவிடர்களுக்கும், திராவிடநாட்டிற்கும் பெரும இழப்பு என்றே கூறலாம். அம்மூவர்களின் மறைவு குறித்து நாம் வருந்துவதோடு மூவர்களின் குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## சாத்தூர் க. ச. படை வழக்கு முடிவு

### நமது தோழர்கள் தண்டிக்கப்பட்டனர்

"சாத்தூரில் இரத உற்சவத்தில் கலவரம் செய்ததாகவும், இரதத்தில் ஆரியர்கள் பூசாரிகளாக இருப்பதை ஆட்சேபித்ததாகவும், திராவிடர் கழகக் கொடியை அதன்மீது ஏற்ற முயற்சிசெய்ததாகவும், காங்கரஸ்காரர்களைத் தாக்கியதாகவும் நமது இயக்கத் தோழர்களான பாலையா, இருளப்பன் முதலான 14பேர்கள் மீது சர்க்காரால் தொடரப்பட்ட வழக்கு நாடகம் முடிந்தது; நான்கு பேர்களுக்கு 6மாத சிறை தண்டனையும், 50ரூபாய் அபராதமும், 2பேர்களுக்கு தலைக்கு 200 ரூபாய் அபராதமும், எஞ்சிய 8 பேர்களுக்கு தலைக்கு 150 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளன; சிறைத்தண்டனை அடைந்த 4தோழர்களும் திருச்சி சென்ட்ரல் சிறைச்சாலைக்கு உடனே கொண்டுபோகப்பட்டனர்; சிறைத் தண்டனைப்பெற்ற நால்வரில் ஒருவரான தோழர் பாலய்யாவுக்கு அண்மையில்தான் திருமணம் நடைபெற்றது. இவர்களைச் சிறைச்சாலையில் கண்டு பேசும்படிக் திராவிடர் கழகத் தலைவர் தோழர் டி. பி. வேதாசலம் பி. ஏ., அவர்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது; வழக்கை அப்பீல் செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது; சாத்தூரில் காங்கரஸ்காரர்களால் நமது தோழர்கள் பல இன்னல்கள் அடைந்தசெய்தி தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டித் தலைவர் தோழர் காமராசநாடார் அவர்களுக்கு நன்கு தெரியும்; அப்படியிருந்தும் நமது தோழர்கள் காங்கரஸ் ஆட்சியில் தண்டிக்கப்பட்டுள்ளனர்" என்று சாத்தூர் திராவிடர் கழகச் செயலாளர் தோழர் பி. இராஜாமணி யறிவிக்கிறார்.

## நெல்லை மாவட்ட தோழர்களுக்கு

பெரியார் அவர்களை இம்மாத இறுதியில் வரவழைத்து நமது மாவட்ட கோட்டாவை அவர்களிடம் கொடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே நிதி டிக்கட் விற்பனை செய்த தோழர்கள் பணத்தையும், மீதியுள்ள டிக்கட்டுகளையும் உடனே அனுப்ப வேண்டுகிறேன்.

கே. வி. கே. சாமி.

## சீர்திருத்தநாடகம்

வந்தவாசி திராவிடர் கழகத்தாரால் பாரதிதாசன் நூல் நிலைய நிதிக்காக, தோழர் டி. கோவிந்தசாமி அவர்கள் எழுதிய "நான் யார்?" என்ற சமூக சீர்திருத்த நாடகம் 1-3-47 இரவு வந்தவாசி ராஜலட்சுமி தியேட்டரில் நடைபெற்றது. நாடகத்தைக்காண சுமார் இரண்டாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் வந்திருந்தனர். நாடகத்திற்கு தோழர் க. அன்பழகன் எம். ஏ. அவர்கள் தலைமை தாங்கினார். தோழர் ஏ. பி. ஜெனார்த்தனம் எம். ஏ., அவர்கள் 'தமிழ்நாட்டில் நாடகக் கலை" என்பதுபற்றிப் பேசினார். தலைமைதாங்கிய அன்பழகன் அவர்கள் நாடகமுடிவில் பேசுகையில் "நான் யார்?' என்ற நாடகத்தின்மூலம் மக்கள் சமூக சீர்திருத்தம் அடைவர் என்றும், இதுபோன்ற நாடகங்கள், எழுதும் இளைஞர்களைப் பாராட்டவேண்டியது மக்களின் கடமை என்றும், எனவே இந்நாடக ஆசிரியர் டி. கோவிந்தசாமி அவர்களை, நான் மனப்பூர்வமாக பாராட்டுகிறேன்" என்றும் பேசினார்.

திராவிட கழகத்தாரால் அளிக்கப்பட்ட இரு வெள்ளிக்கோப்பைகளைத் தோழர் க. அன்பழகன் அவர்கள் நாடக ஆசிரியர் டி. கோவிந்தசாமி அவர்களுக்கும், வந்தவாசி திராவிட கழகத் தலைவர் எல். தங்கவேலர் அவர்களுக்கும், பரிசாக வழங்கினார்.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

சர்வ தேசிய கூட்டத்தின் பலனே அவரது புகழுக்கு முக்கிய காரணமாயிருந்தது.

போலந்து அரசாங்கத்தின் அடக்குமுறையையும் கொடுங்கோலாட்சியையும் கண்டிப்பதற்காக 1864ல் லண்டனில் கூட்டப்பட்ட கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி பிரஞ்சுத் தொழிலாளர்களை 3வது நெப்போலியன் அனுமதித்தார். இக்கூட்டம் செயின்ட் மார்ட்டின் ஹாலில் நடைபெற்றது. பிரிட்டிஷ் டிரேட் யூனியனைச் சேர்ந்தவர்களும், போலந்து தேசத்திலிருந்து தஞ்சமடைந்தவர்களும், ஜர்மனியர்களும், இத்தாலியர்களும் ஏராளமாகக்கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்தில் சர்வ தேசிய யூனியன் ஒன்று அமைக்கப்பட்டது. அதன் அலுவல்களை நடத்த ஒரு கமிட்டியும் ஏற்படுத்தப்பட்டது. அந்தக் கமிட்டியில் மாஜினியின் காரியதரிசி, மேஜர் வொல்ப், மார்க்ஸ், பிரிட்டிஷ் டிரேட் யூனியனைச் சேர்ந்தவர்கள் முதலிய பலரும் அங்கத்தினர்களாயிருந்தனர்.

இத்தாலியிலிருந்த "யங் இத்தாலி" என்ற சங்கத்தைப் போலவே சர்வ தேசிய சங்கத்தின் விதிகளும் இரகசிய விதிகளாக இருக்கவேண்டும் என கமிட்டியில் மேஜர் வொல்ப் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். மார்க்ஸ் அதைக் கண்டித்து 'பிரசங்கமும், விதிகளும்" என்ற எதிர் தீர்மானத்தைக் கொண்டுவந்தார். அது நிறைவேறியது. அந்த விதிகள் அவ்வளவு தெளிவாக இல்லையாயினும் பிரசங்கங்கள் மிக முக்கியமானவையாகவும் அறிவு விளக்கமாயுமிருந்தன. இப்புதிய ஸ்தாபனம் அகில உலகத்திலுள்ள முதலாளிகளுக்கு எதிரான ஸ்தாபனமாகத் தொழிலாளர்களை விளக்கச் செய்ய

## மறுமணம்

2-3-47 காலை 10மணிக்கு மதுரை ரீகல் டாக்கீஸ் நந்தவனத்தில் பொன்மலைத் தோழர் அம்மையப்பனுக்கும் மதுரை கீரைத்துறை தோழர் ராமசாமி அவர்கள் மகள் தோழியர் சீனியம்மாளுக்கும் விதவா விவாக சபையின் ஆதரவில் தோழர் செங்கோயி அவர்கள் தலைமையில் மறுமணம் நடைபெற்றது. அவ்வமயம் நமது இயக்கத் தோழர்கள் ராசமான், முனியப்பன் முதலானவர்கள் மறுமணத்தின் அவசியம் குறித்துப் பேசினார்கள்.

## மதிப்புரை

### இதோ திராவிடர் தந்தை!

இந்நூல் பெரியாரின் 68வது ஆண்டின் நினைவு வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ. அவர்கள் திராவிடநாட்டில் தீட்டிய 'இன்பத் திராவிடமே என் இலட்சியம்' 'வெற்றிவிழா' என்ற இருகட்டுரைகளே 'இதோ, திராவிடர் தந்தை!' என்ற நூல் வடிவில் வந்துள்ளன.

இதன் விலை 5 அணா.

கிடைக்குமிடம்:-
'புரட்சிக்கவி' பதிப்பகம், பெங்களூர்.
திராவிடர் கழகத்தார், பெங்களூர்.

வேண்டும் என்பதே அதில் விளக்கப்பட்டிருந்தது. உலகத்திலுள்ள பாட்டாளி மக்கள் கஷ்டத்திற்கும், துன்பத்திற்கும் வறுமைக்கும் முதலாளித்தத்துவந்தான் காரணம் என்பதை தெள்ளத்தெளிய விளக்கிக் காட்டினார். கடைசியாகத் தொழிலாளர்களை—பாட்டாளிகளைக் கொடுமைப் படுத்துகிறவர்களின் உரிமைகளைப் பறக்கச் செய்துவிடலாம் என்றும் விளக்கினார். இவரது பிரசங்கத்தின் உண்மையானகருத்தை அறிந்த மேஜர் வொல்ப், தான் கொண்டுவந்த தீர்மானத்தை வாபஸ் வாங்கிக்கொண்டதுமன்றியில் தனது தோழர்களுடன் விலகிக்கொண்டார். அதே மாதிரி பிரிட்டிஷ் டிரேட் யூனியன்களும் விலகிக்கொண்டன.

(தொடரும்)

## திராவிடர் கழகத் தேர்தல் கூட்டம்

25-2-47 மேலக்கற்கண்டார் கோட்டை (பொன்மலை)யில் தோழர் எ. விட்டோபா அவர்கள் தலைமையில் திராவிடர் கழக உறுப்பினர் தேர்தல் கூட்டம் நடைபெற்றது. கீழ்க்காணும் தோழர்கள் கழக நிர்வாகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் கா. ஐயம்பெருமாள்; உபதலைவர் நா. துரைசாமி; செயலாளர் எ. விட்டோபா; உதவி செயலாளர் பா. நாகராசு; பொருளாளர் ஜீ. ராதா; நிர்வாக உறுப்பினர்கள் ஐ. மாணிக்கசாமி, ஜீ. ரங்கநாதன், இரா. கோவிந்தராசன், பெருமாள், என். சி. கிருட்டினசாமி, கி. துரைராசு, பாலன்,

## விற்பனைக்குத் தயார்!

பெரியார் அவர்கள் வடநாட்டு சுற்றுப்பிரயாணத்தின்போது அரித்துவாரம் கன்கல் சவைஞான சங்கத்தில் 'மேல்நாடும் கீழ்நாடும்" என்பது பற்றி ஆற்றிய சொற்பொழிவும், வ. ஆ. திருப்பத்தூரில் நடைபெற்ற சுலோசனா—சம்பத் திருமணத்தின்போது 'பெண்கள் அலங்காரப் பொம்மைகளா?' என்ற தலைப்பில் பேசிய பேச்சும், "காங்கிரஸ் திராவிடனுக்கு விண்ணப்பம்" என்று எழுதிய உருக்கமான கட்டுரையும் தனித்தனிப் புத்தகங்களாக வெளிவந்துள்ளன. திராவிடர்களனைவரும் படித்துப் பயன் பெறவேண்டிய நூல்கள்; குறிப்பாக காங்கிரசில் உள்ள திராவிடர்கள் "காங்கிரஸ் திராவிடனுக்கு விண்ணப்பம்" என்ற நூலைப் படித்து உணரவேண்டுகிறோம்.

மூன்று புத்தகங்களின் விலை அணா 5. 6-அணா ஸ்டாம்பு அனுப்புவோருக்கு மூன்று புத்தகங்களும் புக்போஸ்டில் அனுப்பப்படும்.

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited, Printed, and Published by N Karivaradaswamy at the Tamilian Press, 42, Cutcherystreet, ERODE.